JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//83 /2017 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | மாரியப்பன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 05.10.2023

முதல் விசாரணை

நான் தற்போது மேல கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அசா1 யை எனக்கு தெரியும். 20.01.2016 ம் தேதி காலை சுமார் 6 ல் இருந்து 6.30 மணிக்கு நான் அட்டை குளம் --தென்காசி ரோட்டில் walking போய்டுவந்து கொண்டிருந்தேன். அப்போது எங்கள்ஊரை சேர்ந்த வேலு மகன் தர்மர், மலையாண்டி மகன் சமுத்திரம், காளியப்பன் ஆகியோர்கள் அங்கு நின்று கொண்டிருந்தார்கள், அவர்களிடம் நான்பேசி கொண்டிருந்தேன். அப்போது எங்கள் ஊரை சேர்ந்த சுப்பம்மாள் என்பவர் காலைகடன்களை முடித்து விட்டு ரோட்டின் கிழக்கு பக்கம் இருந்து மேற்கு பக்கம் வருவதற்காக நின்று கொண்டிருந்தார். அப்போது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி ஒரு pick up வாகனம்வேகமாக வந்து கொண்டிருந்தது, சுப்பம்மாள் ரோட்டின் கீழ் புறமாக நின்று கொண்டிருந்தார், டப் என்று ஒரு சப்தம் கேட்டது. சுப்பம்மாள் கீழே விழுந்து விட்டார். வாகனத்தின் ஓட்டுநர் சற்று தள்ளி வண்டியை நிப்பாட்டி கீழே இறங்கினார். ஆஜர் எதிரி தான் அந்த

வாகனத்தின் ஓட்டுனர். சுப்பாம்மாளுக்கு தலையில் அடிப்பட்டு ரத்தம் வந்தது, ஆம்புலன்ஸ் மூலம் நாங்கள் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றோம். அங்கு சுப்பம்மாளுக்கு முதலுதவி செய்து தென்காசி அரசுமருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். சுப்பம்மாள்அன்று இரவு இறந்து விட்டார் என்று எனக்கு மறுநாள் தெரிய வந்தது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்

எதிரி தரப்பில் குவி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குவி செய்யப்படவில்லை.

//Sd// - மாரியப்பன்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//83 /2017 |
| | : | Prosecution P.W -1 |
| NAME | : | காளியப்பன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 05.10.2023

**முதல் விசாரணை**

நான் தற்போது கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சுப்பம்மாள் எனதுஅம்மா. கடந்த 20.01.2016 ம் தேதி காலை 6.30 மணிக்கு கடையநல்லூர் ரைஷ் மில் வடபுறம் நானும் எங்கள் ஊரை சேர்நத் சமுத்திரம் , தர்மர், மாரியப்பன் ஆகியோர்கள் பேசிகொண்டிருந்தபோது அட்டைகுளம் -- தென்காசி மெயின் ரோட்டில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி pick up வாகனம் ஒன்று வேகமாக வந்து எனது அம்மா சுப்பம்மாளை சடார் என்று சப்தம் கே ட்டது. பின்பு எனதுஅம்மாவிற்கு தலையில் அடிப்பட்டது. ஒரு ஆம்புலன்ஸ் மூலம் கடையநல்லுர் அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றேன், அங்கிருந்து முதலுதவிக்கு பிறகு தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். எனது அம்மா அன்றே இரவு 10.30 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். அதற்கு பிறகு போலிசில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம்

என்னுடையது தான். அந்த புகார் நான் கொடுத்ததுதான். புகார் மனுவில் உள்ள எனது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. pick up வண்டியை ஓட்டியவரை தெரியும், அதிர்ச்சியில்தெரியவில்லை. தற்போது வண்டியை ஓட்டிய நபர் நீதிமன்ற அறையில் வடக்கு பக்கத்தில் நின்று கொண்டிருக்கிறார், ( ஆஜர் எதிரியை காட்டி சாட்சி சொன்னார்) போலிசார் என்னை விசாரித்தார்கள்

எதிரி தரப்பில் குவி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குவி செய்யப்படவில்லை.

//Sd// -காளியப்பன்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi